**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OS | 187 | of | 2020 |

**2026-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 17-ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** **தரப்பில் வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **சக்திவேல்** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-17.08.2026**

**வா.சா.-1**

**2 ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

போலீசார் என்னிடம் ஜுன் 2020 ல் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அந்த வாக்குமூலத்தில் வா.சா.ஆ.6,7, 8 பற்றி குறிப்பிடவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் புருஷோத்மன், அழகர், தமிழ் வேந்தன் மூவரும் பெரிய கோட்டை சொத்தின் உரிமையாளர்கள் என்றும், அவர்கள் மூவரும் ஒப்பந்தம் போட்டு அதில் 1 ம்பிரதிவாதி சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்று சொல்லியிருக்கிறேன். அந்த ஒப்பந்தம் 19.12.2019 அன்று போடப்பட்டது. அந்த ஒப்பந்ததை இந்தவழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. அந்த ஒப்பந்தம் என் வசம்தான் உள்ளது. 13.03.2020 அன்று நான்

சிவகங்கை சார்பதிவாளர் அலுவலகம் சென்ற போது மேற்படி புருஷோத்மன், அழகர், தமிழ் வேந்தன் மூவரும் அந்த அலுவலகம் வந்திருந்தார்கள் என்று சொல்லியிருக்கிறேன். அந்த மூவரும் என்னிடம் 1ம்பிரதிவாதி தமிழரசனிடம் இருந்து ரூ.16 லட்சம் மட்டுமே கிடைத்தது என்று சொன்னார்கள். அந்த ரூ.16 லட்சத்தையும் சேர்த்துதான் பிரதிவாதிகள் ரூ.67 லட்சத்தி 50 ஆயிரம் பெற்றதாக இந்த வழக்கில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். பெரிய கோட்டை சொத்து சம்மந்தமாக மொத்த கிரய தொகை ரூ. 1 கோடியே 6 லட்சம் ஆகும். அந்த ஒப்பந்தம் முன்னிலைக்கு கிரயம் எதுவும் ஏற்படவில்லை. ரூ.67 லட்சத்து 50 ஆயிரம் கடனாக என்னுடைய வருமான வரி கணக்கில் காட்டப்பட்டுள்ளது. எ்ன்னுடைய வருமான வரி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட ரூ.47 லட்சத்து 50 ஆயிரம், 2ம்பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட ரொக்க தொகை ரூ. 20 லட்சம் அனைத்துமே என்னுடைய வருமான வரி கணக்கில் காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.9 அறிவிப்பிற்கான போஸ்டல் ரசீது அல்லது ஒப்புகை அட்டை குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் பெயரில் பிரதிவாதிகள் இருவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். அவர்கள் எப்போதுசிறையில் இருந்து ஜாமீனில் வெளியே வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ. 9 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட போது பிரதிவாதிகள் இருவரும்

சிறையில் இருந்தார்கள் என்றால் ஒரு வேளை இருக்கலாம். வழக்குரை 03.08.2020 தேதியிட்டது என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்படுவதற்கு முன்பே வழக்குரை தயாரிக்கப்பட்டு விட்டது என்றால் சரிதான். வா.சா-ஆ.5 முதல் 7 வரை காவல் நிலையத்தில் வைத்து பெறப்பட்டது என்றும், எனவே அவை சட்டப்படி செல்லாது என்றும் சொன்னால் சரியல்ல. கடனுறுதி சீட்டுகள் எழுதிக் கொடுக்கப்பட்டுவிட்டதாக சொல்லும் பட்சத்தில் வா.சா.ஆ. 7 பாண்டு பெற வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. புருஷோத்மன், அழகர், தமிழ் வேந்தன் மூவரையும் என் தரப்பில் சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் என் வழக்கறிஞர்தான் முடிவு செய்வார். 30.1.2020, 29.02.2020 ஆகிய தேதிகளில் 1ம் பிரதிவாதிக்குRTGS மூலம் தொகை அனுப்பி இருப்பதால் 2ம்பிரதிவாதிக்கும் RTGS மூலம் அனுப்பியிருக்க முடியும் என்றால் சரியல்ல. எனவே ரொக்கமாக கொடுத்தாக சொல்லி பொய்யான கடனுறுதி சீட்டு 2வது பிரதிவாதிக்கு எதிராக ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. ரூ.2 லட்சத்திற்கு அதிகபடியான தொகையை ரொக்கமாக செலுத்தியதால் எனக்கு வருமான வரி துறையில் இருந்து அறிவிப்பு வந்தது. அந்த அறிவிப்பு என் ஆடிட்டர் வசம் உள்ளது. அதை பெற்று தாக்கல் செய்ய முடியும். 2ம்பிரதிவாதிக்கு எதிராக வழக்குமூலம் இல்லை என்றால்சரியல்ல. வழக்கு 2ம் பிரதிவாதிக்கு எதிராக தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை-இல்லை.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu